


மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு. கடம்பூர் ராஜூ அவர்கள் மற்றும் மாண்புமிகு பள்ளிக்கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர்நலன் துறை அமைச்சர் திரு. கே. பாண்டியராஜன் ஆகியோர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா. சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ. விஜயக்குமார் எம்.பி. அவர்கள் முன்னிலையில், கன்னியாகுமரி மாவட்டம் தாய் தமிழகத்துடன் இணைந்த நாளான நவம்பர் 1-ஆம் தேதியை முன்னிட்டு, குமரி தந்தை மார்ஷல் நேசமணி அவர்களின் திருவுருவ சிலைக்கு நாகர்கோவில் மார்ஷல் நேசமணி மணிமண்டபத்தில் இன்று (01.11.2016) மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள். முன்னாள் அமைச்சர்கள் திரு. என்.தளவாய்சுந்தரம், திரு. கே.டி.பச்சைமால், திரு. சி.த.செல்லபாண்டியன் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

செ.வெ.எண்: 772/2016 நாள்: 01.11.2016

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க,**
**மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்**
**திரு. கடம்பூர் ராஜீ அவர்கள்,**
**மற்றும் மாண்புமிகு பள்ளிக்கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர்நலன் துறை அமைச்சர்**
**திரு. கே. பாண்டியராஜன் ஆகியோர்கள்**
**மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா. சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில்,**
**மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ.விஜயக்குமார் எம்.பி. அவர்கள் முன்னிலையில்,**
**கன்னியாகுமரி மாவட்டம் தாய் தமிழகத்துடன் இணைந்த நாளான**
**நவம்பர் 1-ஆம் தேதியை முன்னிட்டு,**
**குமரி தந்தை மார்ஷல் நேசமணி அவர்களின்**
**திருவுருவ சிலைக்கு**
**இன்று (01.11.2016) மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திருவிதாங்கூர் சமஸ்தானத்துடன் இருந்த குமரி மாவட்டம் தாய்த்தமிழகத்துடன் இணைந்த நாளை நினைவு கூறும் வகையிலும், அதற்காக அரும்பாடுபட்ட குமரித் தந்தை மார்ஷல் நேசமணி அவர்களை பெருமைப்படுத்தும் வகையிலும், நவம்பர் 1-ஆம் தேதி அன்று நாகர்கோவிலில் அமைந்துள்ள மார்ஷல் நேசமணி மணி மண்டபத்தில் உள்ள திருவுருவச் சிலைக்கு ஆண்டுதோறும் தமிழ்நாடு அரசின் சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி அரசு விழாவாக கொண்டாட வேண்டுமென ஆணையிட்டுள்ளார்கள்.

குமரி மாவட்டத்தில் பிறந்து, வளர்ந்து வழக்கறிஞராகி மக்கள் பணியே வாழ்வின் பயன் என்று உணர்ந்து பொது வாழ்வில் ஈடுபட்டு நாகர்கோவில் நகர்மன்றத் தலைவராக, சட்டமன்ற உறுப்பினராக, நாடாளுமன்ற உறுப்பினராக குமரி பகுதி மக்களுக்காக பல்வேறு பணிகளை ஆற்றிய திரு. மார்ஷல் அ. நேசமணி அவர்கள், இந்தியா விடுதலை பெற்ற பின்னரும் திருவிதாங்கூர் சமஸ்தானத்துடன் இருந்த குமரி மாவட்டத்தை, தமிழ்நாட்டுடன் இணைக்க பல போராட்டங்களை நடத்தினார். இந்த போராட்டங்களின் விளைவாக 1956-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 1-ஆம் தேதி கன்னியாகுமரி மாவட்டம் தாய்த்தமிழகத்துடன் இணைந்தது. இதனால் இவருக்கு மார்ஷல் என்று பட்டம் சூட்டி மார்ஷல் நேசமணி என்றும், குமரி தந்தை நேசமணி என்றும் கன்னியாகுமரி மாவட்ட மக்களால் அன்போடு அழைக்கப்பட்டார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு. கடம்பூர் ராஜீ அவர்கள் மற்றும் மாண்புமிகு பள்ளிக்கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர்நலன் துறை அமைச்சர் திரு. கே. பாண்டியராஜன் ஆகியோர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா. சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ.விஜயக்குமார் எம்.பி. அவர்கள், முன்னாள் அமைச்சர்கள் திரு. என்.தளவாய்சுந்தரம், திரு. கே.டி.பச்சைமால், திரு. சி.த.செல்லபாண்டியன் ஆகியோர்கள் முன்னிலையில், கன்னியாகுமரி மாவட்டம் தாய்த்தமிழகத்துடன் இணைந்த நாளான இன்று (01.11.2016) நாகர்கோவிலில் அமைந்துள்ள மார்ஷல் நேசமணி மணி மண்டபத்தில் உள்ள திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

பின்னர், குமரி தந்தை மார்ஷல் நேசமணி அவர்கள் குமரி மாவட்டத்தை தாய் தமிழகத்துடன் இணைப்பதற்காக போராடிய வெற்றி பெற்றதை தலைப்பாக கொண்டு 6-ம் வகுப்பு முதல் 9-ம் வகுப்பு, 10-ம் வகுப்பு முதல் 12-ம் வகுப்பு வரை தனித்தனியாக நடத்தப்பட்ட கட்டுரைப்போட்டி மற்றும் பேச்சுப்போட்டிகளில் வெற்றி பெற்ற 12 மாணவ, மாணவியருக்கு மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு. கடம்பூர் ராஜீ அவர்கள், மாண்புமிகு பள்ளிக்கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர்நலன் துறை அமைச்சர் திரு. கே. பாண்டியராஜன் அவர்கள், ஆகியோர்கள் நினைவுப்பரிசும், பாராட்டு சான்றிதழ்களையும் வழங்கினார்கள்.

பின்னர் அமைச்சர் பெருமக்கள் செய்தி மக்கள் தொடர்புதுறை சார்பாக வைக்கப்பட்டிருந்த சிறப்பு புகைப்படக்கண்காட்சியினை பார்வையிட்டார்கள்.

முன்னதாக அமைச்சர் பெருமக்கள் குமரிதந்தை மார்ஷல் நேசமணி அவர்களின் பேரனான திரு. ரஞ்சித் அப்பலோஸ் நேசமணி அவர்களுக்கு மரியாதை நிமித்தமாக பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்கள்.

நிகழ்ச்சியில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் கூடுதல் இயக்குநர் (ஓய்வு) திரு. தாணப்பா, திரு.அ. தமிழ்மகன் உசேன், இராதாபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஐ.எஸ். இன்பதுரை, தென்காசி சட்டமன்ற உறுப்பினர் திரு. செல்வமோகன்தாஸ் பாண்டியன், ஒட்டபிடாரம் சட்டமன்ற உறுப்பினர் திரு. சுந்தராஜ், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திரு. வெ. ஜெயக்குமார், நாகர்கோவில் கோட்டாட்சியர் திரு. ஆர்.ராஜ்குமார், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. ராஜன், திரு. நாஞ்சில் முருகேசன், திரு. முத்துகிருஷ்ணன், தமிழ்நாடு சிறுபான்மை ஆணைய உறுப்பினர் திரு. ஏ.ஜஸ்டின் செல்வராஜ், ஆரல்வாய்மொழி தொடக்க வேளாண்மை கூட்டுறவு தலைவர் திரு. எஸ்.கிருஷ்ணகுமார், மாவட்ட பால்வள தலைவர் திரு.எஸ்.ஏ. அசோகன், மாவட்ட கூட்டுறவு ஒன்றிய பெருந்தலைவர் திரு. கே.பகவதி பெருமாள், மாவட்ட கூட்டுறவு அச்சகத்தலைவர் திரு. ஆர்.ஜெயசுதர்சன், கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை சங்கத்தலைவர் திரு. சகாயராஜ், அரசு வழக்கறிஞர் திரு. ஞானசேகரன், பொதுப்பணித்துறை உதவிசெயற்பொறியாளர் பொறி ரன்ஸ், உதவிபொறியாளர் பொறி. டேனியல், நாகர்கோவில் நகராட்சி ஆணையர் (பொ) திரு. சுரேஷ்குமார், அகஸ்தீஸ்வரம் வட்டாட்சியர் திரு.எ.வி.மூர்த்தி, நாகர்கோவில் கல்வி மாவட்ட தொடக்கக்கல்வி அலுவலர் திரு. நாகராஜன், கருங்குளம் ஒன்றிய தலைவர் திரு. பிச்சையா, திரு. என்.என்.ஸ்ரீஜயப்பன், திரு. ஜெங்கின்ஸ், திரு. சிவகுற்றாலம், திரு. ஜாண்தங்கம், திரு. சிவசெல்வராஜன், திரு. வேல்முருகன், திரு. ரெஜீஷ்ராஜ், திரு. கே.யு.சி.மணி, திரு. காரவிளை செல்வம், திருமதி. ரோகிணி ஐயப்பன் உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள், மொழிப்போர் தியாகிகள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.